# DEPOSITION OF WITNESS.
# (Chapter XXIII, Cr.P.C)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

**CC.No.160/2023**

Deposition of **PW–1/LW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பிருத்விராஜ் | **Age** | : | 32/2026 |
| **Father's Name** | : | முருகானந்தம் | **Religion** | : | இந்து |
| **Village** | : | கோம்பை | **Calling** | : | விவசாயம் |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **15/04/2026.**

1 ,3 எதிரிகள் ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை. குவிமுச. 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

**1)** நான் கோம்பையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் , 16.02.2023 ம் தேதி காலை 11.00 மணிக்கு பாப்பகுளம் வட்டத்தில் உள்ள எனது தோட்டத்திற்கு தண்ணீர் திறந்து விட சென்றேன். பக்கத்தில் கண்ணன் என்பவரது தோட்டம் உள்ளது. அவருக்கும் எனக்கும் பாதை பிரச்சினை தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. அப்போது எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்த 15 அடி பாதையில் கண்ணன் தென்னை மர கன்றுகளை நடுவதற்கு குழி தோண்டி வைத்திருந்தார்.

2) நான் அவர்களிடம் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்த பிறகு நீங்கள் எப்படி குழி தோண்டி தென்னை மரக் கன்றுகளை நடுவதற்கு முயற்சி செய்யலாம் என்று அவர்களிடம் கேட்டேன் அதற்கு கண்ணன் கையில் வைத்திருந்த

அருவாளைக் கொண்டு என்னை வேலை செய்ய விடாமல் தடுத்தார். உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். பேசிக் கொண்டிருக்கும் போதே அருவாளை கொண்டு எனது காலில் வெட்டினார்.

3) அப்போது அங்கிருந்த கண்ணன் மனைவி என்னை கீழே தள்ளிவிட்டார், கண்ணன் அம்மா கீழே கிடந்த கல்லை எடுத்து என் நெஞ்சின் மீது போட்டார், அதன் பின் 3 பேரும் என்னை கைகளால் அடித்தார்கள். அதன்பிறகு அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்கள் எதிரிகள் 3 பேரையும் விலக்கிவிட்டார்கள். என்னை வீட்டிற்கு போகுமாறு அனுப்பி வைத்தார்கள் நான் நடந்து சிறிது தூரம் சென்ற பின்பு எனது மாமா தோட்டத்தில் மயங்கி கீழே விழுந்துவிட்டேன்.

4 ) எனது மாமா என்னை உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். நான் போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது **(புகார் மனு அ–சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை என தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.15 18:31:12 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**